# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

# DEPOSITION OF WITNESS

| Case No | : | SC. 212/2017 | Village | : | |
|---|---|---|---|---|---|
| Prosecution witness | : | PW-7 | Taluk | : | |
| Name | : | **திரு.ஜான் இருதயராஜ்** | Occupation | : | |
| Father Name | : | திரு. சந்தனசாமி | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 04.08.2025.**

**Both Accused present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தஞ்சாவூர் பாத்திமா நகர் நேதாஜி தெரு நம்பர் 57 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் தேவி எலக்ட்டிரிக்கலில் வேலை பார்க்கிறேன். விக்னேஷ் ஏஜென்சியில் இறந்துபோன ரமேஷ் என்பவரை வேலைக்கு சேர்ந்ததில் இருந்து தெரியும். ரெப்ரசன்டிவ்வாக வேலை பார்த்தார். அ.சா.5 சுரேஷ்குமார் தேவி எலக்கட்டிரிக்கலில் வேலை பார்த்தார் அது கீழ ராஜ வீதியில் உள்ளது. 25.5.2017 அன்று காலை10 மணிக்கு நானும், ஜான் இருதயராஜ்ம் வேலைக்கு சென்றோம். அப்போது ஏஜென்சியில் ஒரே கூட்டமாக இருந்தது. என்னவென்று விசாரித்தபோது ரமேஷை யாரோ கொலை செய்துவிட்டதாக கூட்டத்தில் சொன்னார்கள். பின்பு ஓனரை பார்க்கபோனோம் அவர் போலிஸ்க்கு புகார் செய்ய சென்றதாக சொன்னார். அதன்பிறகு 11.20 க்கு போலிஸார் வந்தார்கள். அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், மூர்த்தி என்பரும் கையெழுத்திட்டோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் 2வது கையொப்பம் என்னுடையது 1வது மூர்த்தி உடையது அது **அ.த.சா.ஆ.3** பார்வைமகசராக குறியாகியுள்ளது. அதன்பிறகு சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த சிமெண்ட் தரை, இரத்தம் படியாத சிமெண்ட் தரை உடைத்து எடுத்து கைபற்றினார்கள். அந்த கைபற்றுதல் மகசரில் நானும், மூர்த்தி கையெழுத்திட்டோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் அதில் நானும், மூர்த்தி என்பரும் கையெழுத்திட்டோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் 2வது கையொப்பம் என்னுடையது 1வது மூர்த்தி உடையது அது **அ.த.சா.ஆ.4** ஆக குறியாகியுள்ள

கைபற்றுதல் மகசராக குறியாகியுள்ளது. என்னிடம் காண்பிக்கபடும் இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத சிமெண்ட் தரையாகும். அது சா.பொ.3, 4 ஆக குறியாகியுள்ளது. போலிஸார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

சம்பவத்திற்கு முன்பாக 1வது எதிரி ரெனால்டை தெரியும் என்றால் ஆமாம். அவர் விக்னேஷ் ஏஜென்சி வேலை பார்த்தால் தெரியும் என்றால் ஆமாம். என்னை போலிஸார் ரமேஷ் இறந்தபிறகு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார் என்றால் ஆமாம். அப்போது எதிரி ரெனால்டு எங்களை விசாரித்தபோது இருந்தார் என்றால் இல்லை, அதன்பிறகு நான் போனபோது 1வது எதிரி தெற்கு காவல்நிலையத்தில் இருந்தார். நான் 2வது நாள் காவல்நிலையத்திற்கு போய் வந்தபோது 1வது எதிரி தெற்கு காவல்நிலையத்தில் இருந்தார் என்றால் இல்லை. திங்கள் கிழமை போலிஸார் என்னை வரச்சொன்னார்கள் நான் போனபோது என்னை 1மணிநேரம் விசாரித்தார்கள் அதன்பிறகு என்ஒனரை வரச்சொன்னார்கள். நான் வெளியில் உட்கார்ந்திருந்தேன் அவரை விசாரித்தார்கள். அப்போது 1வது எதிரி ரெனால்டும் நானும் தெற்கு காவல்நிலையத்தில் வெளியில்தான் உட்கார்ந்திருந்தோம். நான் சொல்வதுபோல் போலிஸ் எங்கள் அலுவலகத்தில் வந்து பார்த்து எடுக்கவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றும் அதில் நான் கையெழுத்துபோட்டேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.